# மகாகவி பாரதியாரின் புதிய ஆத்திசூடிக்கும் பாரதிதாசன் ஆத்திசூடிக்கும் ஓர் ஒப்பாய்வு

# A Comparative Study between Mahakavi Bharathiyar's *Puthiya Aathichudi* and Bharathidasan's *Aathichudi*

*மனோஷ் த/பெ இராமா*
முதுகலைப் பட்டப்படிப்பு ஆய்வாளர் தமிழ்ப்பிரிவு
நவீன மொழித்துறை
மொழி தொடர்பியல் புலம்
சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம்
மலேசியா

**Mannosh Rama**
*Postgraduate Research Scholar*
*Department of Modern Languages*
*Faculty of Languages and Communication Sultan Idris Education University*
*Malaysia*

## ஆய்வுச் சுருக்கம்

*தமிழில் ஆத்திசூடி இலக்கியங்கள் தனிச்சிறப்பைக் கொண்டுள்ளன. ஔவையாரின் காலத்திற்குப் பிறகு, தமிழகத்தில் பல புதிய சிந்தனைகளொடு மகாகவி பாரதியார் "புதிய ஆத்திசூடி" இயற்றினார். பாரதியாரைத் தொடர்ந்து பாரதிதாசனும் ஆத்திசூடி இயற்றினார். அவற்றிக்கு "பாரதிதாசன் ஆத்திசூடி" எனப் பெயரிட்டு 1947-ஆம் ஆண்டில் வெளியிட்டார். "புதிய ஆத்திசூடியிலும்" பாரதிதாசன் ஆத்திசூடியிலும் உள்ளடங்கியிருக்கும் கருத்துகள் 8 கூறுகளின் அடிப்படையில் பகுத்துப் பேசப்பட்டிருப்பதை அறிய முடிகின்றன. 8 கூறுகளில் பேச்சு முறைமை, கலை, சிந்தனை, ஒற்றுமையுணர்வு என்ற 4 கூறுகளை மையப்படுத்தி இவ்விரு ஆத்திசூடிகளில் பேசப்பட்டிருக்கும் கருத்துகளிடையே இருக்கும் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் ஆராய்ந்து காட்சிப்படுத்தும் நோக்கத்திலே இந்த ஒப்பாய்வு முனைந்துள்ளது இவ்வொப் பாய்வு பண்புசார் அணுகுமுறையை உட்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதிய ஆத்திசூடியும் பாரதிதாசன் ஆத்திசூடியும் இவ்வாய்வில் ஆய்வு மாதிரிகளாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.*

**கருச்சொற்கள்:**

*ஆத்திசூடி இலக்கியங்கள், கூறுகள், பாரதிதாசன், பாரதியார், பாரதிதாசன் ஆத்திசூடி, புதிய ஆத்திசூடி*

## Abstract

*Aathichudi is one of the greatest literary works in Tamil literature. After the era of Avvaiyar, Mahakavi Barathiyar wrote his 'Puthiya Aathichudi' under new perspectives and vision in Tamilakam. Following Mahakavi Barathiyar, Barathidasan also penned another Aathichudi literature and named it 'Barathidasan Aathichudi which was published in the year 1947. It is known that 8 main elements were discussed in both Aathicudi literature. Hence, this comparative study aims to discuss the differences and similarities based on 4 out of 8 elements in both Aathicudi literature, which are the Art of Speaking, Arts, Unity, and the Art of Thinking. Qualitative research method were used in this study. Barathiyar's 'Puthiya Aathichudi' and Barathidasan's 'Barathidasan Aathichudi' have been used as research subjects for this comparative study.*

***Keywords***

*Mahakavi Barathiyar, Barathidasan, Puthiya Aathichudi, Barathidasan Aathichudi, Elements*

**Citation**

Rama, M. "A Comparative Study between Mahakavi Bharathiyar's *Puthiya Aathichudi* and Bharathitasan *Aathichudi*." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 1, 2024, pp. 33–42.


**முன்னுரை: பாரதியாரும் பாரதிதாசனும்**

*தமிழ் இலக்கிய வரலாற்றில் கவிதைத் துறையில் குறிப்பிடத்தக்க இருவர் பாரதியாரும் பாரதிதாசனுமாவர் (*Balasubramaniam*, 1990). எட்டயபுரத்தில் 1881-ஆம் ஆண்டில் பிறந்த பாரதியார், தன் கவிப்புலமை காரணத்தினால் "பாரதி" எனச் சிறுவயதிலேயே அழைக்கப்பட்டார். புதுவையில் 1891-ஆம் ஆண்டில் பிறந்த பாரதிதாசன், 1895-ஆம் ஆண்டில் ஆசிரியர் திருப்புளி சாமியிடம் தொடக்கக் கல்வியை மேற்கொண்டு இளம் வயதிலேயே கவிபுனையும் ஆற்றல் பெற்றார் (*Balasubramaniam*, 1990). இவ்விரு கவிஞர்கள் பாண்டிச்சேரியில் வேணுநாயக்கர் வீட்டுத் திருமணத்தில் முதன்முதலில் சந்தித்தனர். "வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர் வேறொன்றும் கொள்வாரோ" என்ற பாரதியின் நாட்டுப் பற்றோங்கும் பாடலைப் பாரதிதாசன் உணர்ச்சியுடனும் இசையுடனும் பாடியதில் இவ்விருவர்களுக்கிடைய நட்பு முற்றியது. பாரதியாரின் எளிய தமிழும், புலமை மிடுக்கேறிய பாரதிதாசனைப் பற்றியது. பாரதியாரின் தாசனாகப் பாரதிதாசன் இருந்தார். பாரதியாருடன் நெருங்கிப் பழகிய பழக்கத்தால் சாதி, மதம் கருதாத தெளிந்த உறுதியான கருத்துகளைப் பாடல், கட்டுரை, கதை போன்ற பல்வேறு வழிகளில் 10 ஆண்டுக் காலம் வரை எழுதி, பாரதியார்க்கு உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் தோழனாய் இருந்தார் பாரதிதாசன். தேசியக் கவிஞராகவும் விடுதலைக் கவிஞராகவும் பாரதியார் திகழ்ந்தார். பாரதிதாசன் சமுதாயக் கவிஞராகத் துலங்கினார். இருபதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கிய வானின் இருபெரும் கவிஞர்களான இவ்விருவரின் பற்றிய சுருக்கக் கருத்து இதுவெனக் கொள்ளலாம்.*

*பாரதியாரும் பாரதிதாசனும் எண்ணற்ற கவிதைகள், கதைகள், கட்டுரைகள் எழுதியிருப்பின் அவர்கள் இருவரும் அருளிய ஆத்திசூடி இலக்கியங்களானது தமிழ் இலக்கியத்தில் தனிச்சிறப்பைப் பிடித்துள்ளன. இருபதாம் நூற்றாண்டில் ஆத்திசூடி இலக்கியம் எண்ணற்ற ஆய்வுகளில் புகுந்து ஒளிர்ந்தபோது, புதிய ஆத்திசூடி மகாகவி பாரதியாரால் எழுதப்பட்டது. அதேவேளையில், பாரதியாரின் தாசனாக இருந்த பாரதிதாசனும் "பாரதிதாசன் ஆத்திசூடி" எனத் தம் பெயரிலே நூலிற்குப் பெயரிட்டு அவ்வாத்திசூடிற்குத் அவரே உரை எழுதி வெளியிட்டார். தமிழ் இலக்கியத்தில் சிறப்பு வாய்ந்து இருக்கும் காரணத்தினால், இவ்விரு ஆத்திசூடிகளையும் ஆராய்ச்சிக்கு உட்படுத்தி எல்லாக் கோணங்களிலும் அணுகு விழைவது அவசியம் எனப் புலப்படுகிறது.*

**புதிய ஆத்திசூடியும் பாரதிதாசன் ஆத்திசூடியும் அதன் கருத்துப் பகுப்பும்**

*தமிழில் "ஆத்திசூடி" ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த இலக்கியப் படைப்பாகும். ஆத்திசூடி இருசீர் கொண்ட தனித்தனி அடிகளால் அறநெறிகளை எளிமையாகவும் சுருக்கமாகவும் அறிவுருத்துகிறது. பண்டைத் தமிழகத்தில் ஔவை எனும் பெயர்கொண்ட பெண்பாற் புலவர்கள் அதிகமாக இருந்துள்ளனர் என வரலாறு கூறுகின்றது. ஆனால், கம்பர் காலத்தில் வாழ்ந்த ஔவையே தமிழில் முதன்முதலில் ஆத்திசூடியை இயற்றியதாக வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கருத்துரைக்கின்றனர்* (Bathmathevan Tamilpiriyan, 2019, p. 7)*. ஔவையாரின் காலத்திற்குப் பிறகு தமிழகத்தில் சில புதிய சிந்தனைகளொடு மகாகவி பாரதியார் "புதிய ஆத்திசூடி" இயற்றினார். புதிய காலத்திற்கேற்ற முறையில் சமுகத்தில் புதிய சிந்தனைகளை வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் பாரதியார் இதனை இயற்றினார். இவற்றுள் மொத்தம் 110 அடிகள் உள்ளன. பாரதியாரைத் தொடர்ந்து, 1947-ஆம் ஆண்டில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனும் 85 அடிகள் கொண்ட ஆத்திசூடியை இயற்றினார். அவற்றிக்கு "பாரதிதாசன் ஆத்திசூடி" என்ற தம் பெயரிலே பெயரிட்டு, அந்நூலை அவ்வாண்டிலே வெளியீடு செய்தார்.*




***வரைபடம் 1: புதிய ஆத்திசூடியிலும் பாரதிதாசன் ஆத்திசூடியிலும் இடம்பெற்ற கூறுகளின் பகுப்பு***

*பாரதியாரும் பாரதிதாசனும் அவர்களின் அறிவார்ந்த சிந்தனையில் தோன்றிய கருத்துகளைத் தம்முடைய கவிதைகளிலும் கட்டுரைகளிலும் பரந்து விரிந்த கோணத்தில் விளக்கியிருந்த போதில், தான் இயற்றிய ஆத்திசூடிகளிலும் கருத்தகளை அனைத்தும் சுருக்கமாகவும் பரந்த பொருளுடனும் விளக்கியிருப்பதை உணர முடிகின்றது. மேற்காணும் வரைபடம் 1 ஆராயுமிடத்து, புதிய ஆத்திசூடியிலும் பாரதிதாசன் ஆத்திசூடியிலும் உரைக்கப்பட்ட கருத்துகளானது 8 கூறுகளின் அடிப்படையில் பேசப்பட்டுள்ளதை இவ்வாய்வில் அறிய வந்துள்ளது. இவ்வெட்டுக் கூறுகளில் நான்கு கூறுகளை மட்டும் தெரிவு செய்து இவ்விரு ஆத்திசூடிகளில் அக்கூறுகளைக் குறித்துப் பேசப்பட்டிருக்கும் கருத்துகளிடையே இருக்கும் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் ஆராய்ந்து காட்சிப்படுத்தும் நோக்கத்திலே இந்த ஒப்பாய்வு எடுத்தாளப்பட்டுள்ளது.*

## ஆய்வு நோக்கம்

*பேச்சு முறைமை, கலை, சிந்தனை, ஒற்றுமையுணர்வு ஆகியவற்றைக் குறித்துப் புதிய ஆத்திசூடியிலும் பாரதிதாசன் ஆத்திசூடியிலும் எவ்வாறு பேசப்பட்டு வந்துள்ளன என்பதனை ஆராய்ந்து, அக்கருத்துகளினிடையே இருக்கும் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் காட்சிப்படுத்தும் நோக்கத்திலே இந்த ஒப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

## ஆய்வு நெறிமுறை

*இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையை உட்படுத்தி ஒப்பாய்வு வடிவமைப்பில் அமைந்துள்ளது. இந்த ஆய்வில் பாரதியாரின் புதிய ஆத்திசூடியும் பாரதிதாசன் ஆத்திசூடியும் ஆய்வுமாதிரிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.அவற்றைச்சார்ந்தகட்டுரைகளும்நூல்களும் ஆய்வுத்தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

## ஆய்வுக் கண்டுபிடிப்பு

### பேச்சு முறைமை

*மனிதன் தன்னுடைய ஆளுமைத்திறனை* (Personality) *மேம்படுத்துவதற்குப் பேச்சுத் திறனில் மிகுந்த செல்வாக்கினைப் பெறுவது அவசியம்* (Narayanan, 2021). *ஒருவர் மற்றொருவருக்குத் தன் கூற விளையும் கருத்துகளை எவ்வாறு, எவ்விதம் பரிமாற்றம் செய்வதற்குச் சிறந்த*

*பேச்சு முறைமை கொண்டிருக்கவில்லையென்றால் சமூகத்தில் உறவுமுறிவுகளை ஏற்படுத்திவிடும்* (Raguram,2017). *ஆக, சிறந்த ஆளுமைத்திறனைக் கொண்டிருக்க வேண்டுமென்றால்சிறந்த பேச்சு முறைமை கொண்டிருப்பது அவசியம் என்பது உறுதியாயிற்று. பாரதிதாசனும் பாரதியாரும் தமது ஆத்திசூடிகளில் பேச்சு முறைமை குறித்துப் பேசியுள்ளதைப்பின்னிணைப்பு1-இல் தொகுத்துக் காட்டப்பட்டுள்ளது.*

*ஒருவர் எந்த இடத்தில், எச்சூழ்நிலையில் எவ்விதத்தில் பேச வேண்டும் வேண்டாமென்பதை இருவரும் வழிகாட்டியுள்ளனர். அதாவது, ஓர் உரையாடலில் எத்தகையான பேச்சு முறைமையைக் கையாள வேண்டும் என்பனவற்றைக் குறித்து விளக்கியுள்ளனர். அதனடிப்படையில், பாரதிதாசன் ஆத்திசூடியில் மூவகையான பேச்சு முறைமைகள் காணப்படுகின்றன. அவற்றின் சுருக்கம் பின்னிணைப்பு2-இல் விவரிக்கப் பட்டுள்ளது.*

***“செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்” (தொல்.496),***

*என்பது தொல்காப்பியச் சொல்லதிகார நூற்பா. இது வினா விடை அமையும் முறையை விளக்குகிறது. ஒருவர் கேட்கும் கேள்வியும் அதற்கான விடையும் பிழையின்றி இருக்க வேண்டும் என்பதே இந்நூற்பாவின் பொருள். வினவப்படும் கேள்வியின் நுட்பத்தைக் கொண்டு ஒருவரின் அறிவுத்திறனையும் அக்கேள்விக்கு ஒருவர் கூறும் விடையைக்கொண்டு அவருடையை மனச்செம்மையும் அறிவுத்திறனையும் ஆராய இயலும்* (Annamalai, 2019, p. 26). *ஆனால், அதற்கு ஒருவர் மற்றொருவர் பேச்சை முழுமையாகச் செவியுறுவது அவசியம். இதைத்தான் பாரதிதாசன் “கேட்டு விடை இறு” (பா.ஆத்திசூடி 20) என்கிறார். பிறர் செ ால்லை முழுவதும் வாங்கிக் கொண்டு விடை கூறு என்கிறார் பாரதிதாசன். இஃது இருவழித் தொடர்பாடலில் அல்லது வினாவிடையின் பொது கடைப்பிடிக்க வேண்டிய பேச்சு முறைமையைக் குறிப்பதை உணரலாம். மேலும், மனதைக் கவரும்படி இனிதாகப் பேச வேண்டும் என்பதை “தைக்க இனிதுரை” (பா.ஆத்திசூடி 43) என்று பாரதிதாசன் கூறியுள்ளார்.*

*புதிய ஆத்திசூடியில் பேச்சு முறைமையைப் பற்றிப்பாரதியார் ஆறுவகையாகப் பகுத்துப் பேசியுள்ளார். பின்னிணைப்பு3 அதன் சுருக்கத்தினைக் காட்டுகிறது. பிறரிடம் விளக்கவிருக்கின்ற கருத்துகளைக் கேட்பவர்கள் உடனே புரிந்துகொள்ளும் வகையில் திறம்பட தகவலைத் தெரிவிக்கின்ற ஆற்றலுடையவர்களே பேச்சுத்திறனால் ஆளுமைத் திறனையுடையவர்கள் என்று சாக்ரடீஸ் கருதுகிறார். சாக்ரடீஸின் கருத்தின்படி பாரதியாரும் “சொல்வது தெளிந்து சொல்” (பு.ஆத்திசூடி 34) என்று கூறியுள்ளார். ஒருவர் தெளிவாகவும், பொருள்படவும், தீர்க்கமாகவும் பேச வேண்டும் என்பதன் இவ்வாத்திசூடியின் பொருள். இவ்வகையான பேச்சு முறைமையை மேலும் செம்மைப்படுத்துவதற்குப் பாரதியாரே அவர் தம் இயற்றிய ஆத்திசூடியில் குறித்துள்ளார். எதையும் நிதானமாக ஆராய்ந்து நன்கு புரிந்து கொண்டு பேச வேண்டும் என்கிறார் பாரதியார். அதற்கு “மெல்லத் தெரிந்துசொல்” (பு.ஆத்திசூடி 81) என்று உரைத்துள்ளார்* (Seenivasan, 2022). *ஆராய்ந்து பேசுவதுதெளிவாகவும், பொருள்படவும், தீர்க்கமாகவும் பேச வழிவகுக்கும் என்று பாரதியார் எண்ணுவது இங்கு நோக்கத்தக்கது.*

*தொடர்ந்து, ஓர் உரையாடலில் வெளிப்படையாகப் பேச வேண்டும் என்பதை “நேர்படப் பேசு”(பு.ஆத்திசூடி 61) என்றும் அதனுடன் சரியாக உச்சரித்துப் பேச வேண்டும் என்பதை “வெடிப்புறப் பேசு”(பு.ஆத்திசூடி 107) என்றும் உரைத்துள்ளார். ஆக, இதுகாறும் விளக்கப்பட்ட கருத்துகளில் பாரதியாருக்கும் பாரதிதாசனுக்கும் ஒரு வேறுபாடு அமைந்துள்ளதைக் காண வேண்டும். பாரதிதாசன் ஓர் உரையாடல் எப்படி இருக்க வேண்டும் என்பதை சுருக்கமாகக் கூறியுள்ளார் அன்றி பாரதியார் போல் அத்தகையான ஓர் உரையாடலைக் கையாளவதற்கான*

*வழிகளைக் குறிப்பிடவில்லை என்பது நோக்கத்தக்க விடயமாகும். மணிச்சுருக்கமாகக் கூறினால், பிறர் சொல்லை முழுவதும் வாங்கிக் கொண்டு விடை கூறும் முறையைப் பாரதிதாசன் கூறியதோடு இல்லாமல், பாரதியார் அவ்விடையைப் பிறருக்கு எவ்வகையான பேச்சு முறைமைகளைக்கையாண்டு தெளிவாகக் கூற வேண்டும் என்பதை நுணுக்கமாக விளக்கியுள்ளார்.*

*பேச்சு முறைமையைக் குறித்து இருவருக்கும் சில வேற்றுமைகள் இருப்பின், வீண் பேச்சுப் பேசும் பழக்கதைத் தவிர்க்க வேண்டுமெனும் கருத்தில் ஒற்றுமை காணப்படுகின்றது. பாரதியார் அவசியம் இல்லா இடங்களில் பேசுவதைத் தவிர்த்து மௌனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை "மோனம் போற்று"(பு.ஆத்திசூடி 84) என்றும், குறைகூறிப் பேசும் பழக்கத்தைத் தவிர்க்க வேண்டும் என்பதை "தூற்றுதல் ஒழி"(பு.ஆத்திசூடி 47) என்றும் குறிப்பிட்டுள்ளார். "வெறும் பேச்சுப் பேசேல்" (பா.ஆத்திசூடி 83) மூலம் பயனற்ற பேச்சுப் பேசுதல் வேண்டாம் என்று பாரதிதாசனும் பாரதியாரைப் போல் கட்டளையிட்டுள்ளார்.*

**கலை**

*பாரதியாரும் பாரதிதாசனும் கலையுணர்வு கொண்ட கவிஞர்கள் ஆவர். அதற்கு அவர்கள் இயற்றிய கவிதைகளும் ஆத்திசூடிகளும் சான்றாக அமைந்துள்ளன. ஓவியக் கலையைக் குறித்து இருவரும் தங்களின் ஆத்திசூடிகளில் விவரித்துள்ளனர். ஓவியங்களைக் கண்டு மனம் களிக்க வேண்டும் என்று பாரதியார் வலியுறுத்துகிறார். அதற்கு "ரேகையில் கனிகொள்" (பு.ஆத்திசூடி 94) என்று கூறியுள்ளார். ஆனால், கலை என்பது பயிற்சியால் கற்கப்படுவன* (Bavanar, 2017, p. 134) *என்பதால் பாரதிதாசன் பாரதியாரின் கருத்திற்குச் சற்று வேறுபட்டு ஓவியப் பயிற்சி பெற வேண்டுமென கூறியுள்ளார். "ஓவியம் பயில்" (பா.ஆத்திசூடி 11) என்று பாரதிதாசன் கூறுவது ஓவியங்களைக் கண்டு மனம் களிப்பது மட்டுமல்லாமல் அவ்வோவியக் கலையைக் கற்க வேண்டும் என்பதே.*

*அடுத்து, பாரதிதாசன் ஆடற்கலையைப் பயில வேண்டுமென்பதற்கு "சைகையோ டாடல்தேர்" (பா.ஆத்திசூடி 32) என்று குறித்துள்ளார். ஆடற்கலையைக் குறித்துப் பாரதியார் தன் புதிய ஆத்திசூடியில் பேசவில்லை. ஆக, கலைகளை எடுத்துக்கொண்டோமானால் ஆடற்கலையிலும் ஓவியக் கலையிலும் இவ்விரு கவிஞர்களின் பார்வை வேறுபட்டுள்ளன.*

*இசைக்கலையிலும் போர்க்கலையிலும் பாரதியாருக்கும் பாரதிதாசனுக்கும் ஒத்த சிந்தனை அமைந்துள்ளது. பாரதியார் பாட்டினில் ஆர்வம் கொண்டு அதனைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை "பாட்டினில் அன்புசெய்" (பு.ஆத்திசூடி 66) என்று கூறியுள்ளார். பாரதிதாசனும் பாரதியாரின் கருத்திற்கேற்ப, பாடும் திறனைப் பெற வேண்டும் என்பதற்கு "தேன் எனப் பாடு" (பா.ஆத்திசூடி 42) என்று வலியுறுத்திருப்பது நோக்கத்தக்கது. இசைக் கலையைத் தொடர்ந்து, ஆண் பெண் எனப் பாகுபாடின்றி இரு பாலினமும் யுத்தக் கலைப் பயிற்சியைப் பெற வேண்டும் எனப் பாரதியாரும் பாரதிதாசனும் வலியுறுத்தி "போர்த்தொழில் பழகு" (பு.ஆத்திசூடி 74 பா.ஆத்திசூடி 67) என்று தமது ஆத்திசூடிகளில் ஒரே மாதிரி குறிப்பிட்டுள்ளனர். கலையில் இவ்விரு கவிஞர்களிடையே இருக்கும் ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் பின்னிணைப்பு4-இல் சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது.*

**ஒற்றுமையுணர்வு**

*விட்டுக் கொடுத்துக் கட்டுப்பட்டு ஒன்றி வாழும் நோக்குடன் உருவாக்கப்பட்ட அமைப்பே சமூகம்* (Mohanarasu, 2018). *இச்சமூகம் மொழிகள், மதங்கள், இனங்கள் ஆகியவற்றால்*

வேறுபட்டு வாழ்கிறது. இத்தகைய வேற்றுமைகளில் ஒற்றுமை காண்பதில் சமூகப் பலம் உண்டாகும் என வலியுறுத்தி பாரதியார் "ஒற்றுமையே வலிமையாம்" (பு.ஆத்திசூடி 10) என்று எடுத்துக் காட்டியுள்ளார் (Seenivasan, 2022). பாரதிதாசனும் பாரதியாரின் கூற்றுக்கேற்ப உலகிலுள்ள மக்கள் யாவரும் நம் உறவினர் என்றவர் கருதியதால் "அனைவரும் உறவினர்" (பா.ஆத்திசூடி 1) என்றுரைத்துள்ளார்.

தொடர்ந்து, பாரதியார் நட்பிலும் தொழிலிலும் ஒற்றுமையை வளர்க்க வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளார். தொழிலில் பலருடன் ஒற்றுமையாகப் பணியுரிய வேண்டும் என்பதற்காக "கூடித் தொழில்செய்" (பு.ஆத்திசூடி 18) என்கிறார். நல்ல நட்பைக் கெடுத்துவிடாமல் ஒற்றுமையுடன் இருக்க "சேர்க்கை அழியேல்" (பு.ஆத்திசூடி 32) என்று கட்டளையிட்டுள்ளார். பிறர்க்கு நாம் கொடுக்கும் மரியாதை சக மனிதர்களிடையே ஒற்றுமையை வளர்க்கும் என்றுணர்ந்த பாரதியார் "யாரையும் மதித்துவாழ்" (பு.ஆத்திசூடி 87) என்றும் "ஏேயம் காத்தல்செய்" (பு.ஆத்திசூடி 41) என்றும் கட்டளையிட்டுள்ளார்.

பாரதிதாசன் பாரதியாரைப் போல் நட்பு, தொழில், மரியாதை செலுத்துதல் என்று பாகுபாடு செய்யாமல் உலகளாவிய ஒற்றுமையுணர்வைப் பற்றிப் பேசியுள்ளார். The Institute for Economics Peace (IEP) வெளியிட்ட 2023- ஆம் ஆண்டின் Global Peace Index அறிக்கையில் உலக அமைதியின் நிலையைக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றுள் வன்முறையும் போர்களும் 60% உலக அமைதிற்குக் கேடு விளைவித்துள்ளது என்பதையும் கடந்த 13 ஆண்டுகளாக உலக அமைதி குன்றிக்கொண்டே வருகின்றது என்பதையும் குறிப்பிடப்பட்டுள்ளது. வன்முறையும் போர்களும் ஒருவர் ஒற்றுமையுணர்வினைக் கருதாமல் தன்னுடைய சுயநலத்தின் காரணத்தால் ஏற்படுகின்ற விளைவு. இதனை நன்குணர்ந்த பாரதிதாசன், அன்றே உலக அமைதிற்கு மனவொற்றுமை ஒன்றே தீர்வாக அமையும் என்றார். அதற்கு "ஒற்றுமை அமைதி" (பா.ஆத்திசூடி 10) என்று கூறியுள்ளார். இங்குப் பாரதிதாசன் உலக அரசியலில் இருக்கும் சர்வதேச உறவினைக் குறிப்பதையும் உணருக. ஒற்றுமையுணர்வில் இவ்விரு கவிஞர்களிடையே இருக்கும் ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் பின்னிணைப்பு 5-இல் சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது.

**சிந்தனை**

மனிதனை விலங்குகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவது மனிதனிடம் இருக்கும் ஆறாம் அறிவான பகுத்தறிவாகும். இப்பகுத்தறிவுடன் சிந்தனை இணைக்கப்பட்டிருக்கிறது (Seenivasan, 2022). சிந்தனையாற்றலை மேம்படுத்துவதன் மூலம் பலதரப்பட்ட தகவல்களைத் திரட்டி அதனை ஆராய்ந்து பகுத்துப் பார்க்க மனிதனால் இயலுகின்றது (Kartheges, 2017). ஒரு சிறந்த சிந்தனையாற்றலே நல்லறிவைப் பெருக்க உதவும் (Dobelli, 2014, p. 149). இக்கருத்தானது எப்படி ஒரு சிறந்த சிந்தனையாற்றலை கொண்டிருக்க முடியுமென கேள்வியை எழுப்புகின்றது. ஒருவரது சிந்தனை எப்படி இருக்கின்றதோ அச்சிந்தனைக்கேற்ப அவரும் இருப்பார் என்று புத்தர் கருதுகிறார். ஆக, ஒருவர் எத்தகையான சிந்தனையைக் கொண்டிருக்க வேண்டும், அவர் எப்படிச் சிந்திக்க வேண்டும் வேண்டாமென்பதையே இங்குச் சிந்திக்க வேண்டிய விடயமாக அமைந்துள்ளது. பாரதியாரும் பாரதிதாசனும் இச்சிந்தனையைக் குறித்துத் தமது ஆத்திசூடிகளில் பேசியுள்ளனர். அதனுடைய சுருக்கம் பின்னிணைப்பு6-இல் காட்டப்பட்டுள்ளது.

நாம் சிந்திக்க வேண்டியது மேலானவற்றதாக இருக்க வேண்டும் என்பதற்காகப் "எண்ணுவது உயர்வு" (பு.ஆத்திசூடி 7) எனப் பாரதியார் கட்டளையிட்டுள்ளார். பாரதியாரின்

*கூற்றுக்கேற்ப பாரதிதாசனும் குறுகிய சிந்தனையை அகற்ற வேண்டும் என்பதற்கு "குள்ள நினைவு தீர்" (பா.ஆத்திசூடி 17) எனத் தன் ஆத்திசூடியில் கூறியுள்ளார். ஆக, நம் சிந்தனை உயர்வானதாகவே இருப்பது அவசியம் என்பது இவ்விரு கவிஞர்களின் கட்டளைகளின் வழியே புலப்படுகின்றது. அடுத்து, உடல்நலமும் மனநலமும் நன்றாக இருக்க நல்ல சிந்தனைகளைக் கொண்டிருக்க வேண்டும்* (Henrik, 2019/2020, pp. 1-4, 58). *நல்ல சிந்தனையுடையவர்களாக இருக்க பாரதியார் "நன்று கருது" (ஆத்திசூடி 54) என்கிறார். பாரதியாரின் கருத்திற்கு மேலும் வலுவூட்டும் வகையில் பாரதிதாசனும் "கெடு நினைவகற்று" (பா.ஆத்திசூடி 19) என்று கூறுகிறார். பிறரைக் கெடுக்கும் சிந்தனையை நீக்க வேண்டும் என்பதே இவ்விரு கவிஞர்கள் கூற வரும்செய்தி.*

*தொடர்ந்து, ஆய்வுச் சிந்தனையைச் குறித்து இருவரும் புத்தகத்தை மையப்படுத்தி கூறியுள்ளனர். புத்தகங்களைப் படிக்கும் போது அவற்றுள் உள்ளடங்கிருக்கும் தகவல்களின் உண்மைப் பொருளை உணர்ந்து கொள்வதன் மட்டுமல்லாமல் அத்தகவல்களைப் பகுத்தாராய்ந்து கற்றுத் தெளிய வேண்டும். இதனைச் செயற்படுத்த ஆய்வுச் சிந்தனையுடையவர்களாக இருக்க வேண்டும்* (Seenivasan, 2022). *பாரதிதாசன் இதற்கு "நூலும் புளுகும்" (பா.ஆத்திசூடி 51) என்றுள்ளார். எல்லா நூற்களும் உண்மை கூறும் என நம்பிவிடக்கூடாது என்று பாரதிதாசன் கூறுவதில், அவற்றுள் அவர் ஆய்வுச் சிந்தனையின் அவசியத்தைப் பற்றி மறைமுகமாகக் குறித்திருப்பதை நோக்குக. பாரதியாரும் நூல்களிலுள்ள கருத்துகளை அப்படியே நம்பி விடாமல் அவற்றை ஆராய்ந்து உண்மையை உணர்ந்து கொள்ள "நூலினைப் பகுத்துணர்" (பு.ஆத்திசூடி 59) என்கிறார். "பகுத்துணர்" என்னுஞ் சொல்லிலே பாரதியார் ஆய்வுச் சிந்தனையைப் பற்றி பேசியுள்ளதை அறியலாம். இன்று ஆய்வியற்றுறையில் நூலைப் பகுத்தாராய்வதை "நூலாய்வு" என்று கூறுவதை இங்கு நினைவுகூறத்தக்கது.*

*ஆய்வுச் சிந்தனை குறித்துப் பாரதியார் குறிப்பிடாத ஒரு செய்தியைப் பாரதிதாசன் தன் ஆத்திசூடியில் குறிப்பிட்டுள்ளார். ஆய்வுச்சிந்தனையைக் கொண்டு நூலைப் பகுத்தாராய்வதில் மட்டுமல்லாமல் சமூகம், அரசியல், பொருளாதாரம் போன்றவற்றிலும் கையாளவதற்குப் பாரதிதாசன் "சூழ்நிலை நோக்கு"(பா.ஆத்திசூடி 29) என்று கட்டளையிட்டுள்ளார். வினை செய்ய அன்றுள்ள நிலைமையை ஆராயப்பட வேண்டும் என்பதே இவ்வாத்திசூடியின் பொருள். "அன்றுள்ள நிலை" எனுந் தொடர் சமூகத்தின் நிலைமையும் அரசியல் நிலைமையும் பொருளாதார நிலைமையும் குறிக்கின்றது* (Mohanarasu, 2018). *ஆக, வினை செய்ய சமூகவியலாய்வு, அரசியலாய்வு* (Political Science), *பொருளாதாராய்வு* (Economic Research) *போன்ற ஆய்வுகளை ஒருவர் நுண்ணிய ஆய்வுச் சிந்தனைகளொடு மேற்கொள்ள வேண்டும் என்று பாரதிதாசன் அறிவுறுத்துவதை உணருக.*

**நிறைவுரை**


*இந்த நூற்றாண்டின் இணையில்லா இருபெருங் கவிஞர்களான பாரதியும் பாரதிதாசனும் இயற்றிய ஆத்திசூடிகளில் மனிதன் சிறப்புற வாழ்வாங்குவாழ வழிகாட்டும் விதத்திலேயே கூறி நமக்குப் போதித்துள்ளனர். எனவே, பாரதியாரும் பாரதிதாசனும் எடுத்துரைக்கும் கட்டளைகளை நிறைவேற்றுவது நமது தலையாய கடமையாகும். அவற்றை நமது வாழ்விலும் கடைப்பிடிப்பது அவசியம் என்பதை இவ்வாய்வு வலியுறுத்துகின்றது. அதுமட்டுமல்லாமல், தமிழில் மொத்தம் 14 ஆத்திசூடி இலக்கியங்கள் உள்ளன. இந்த 14 ஆத்திசூடிகளைச் சார்ந்து மேலும் பல ஆய்வுகள் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டும் என்பதை இவ்வாய்வு பரிந்துரைகின்றது.*

## References



1. Annamalai, M. D. (2019). Tolkaapiya Thenn Tumikal (1st Edition, p. 26). Uma Publications.
2. Balasubramaniam. (1990). Barathiyum Barathithasanum (2nd Edition). Narumalar Pathipagam.
3. Barathitasan. (1988). Barathitasan Aatichudi (3rd Edition). Poompuhar Pathipagam.
4. Bathmathevan. (2018). Barathiyar Kavithaigal (1st Edition, pp. 850–862). Karpagam Puthakalaayam.
5. Bathmathevan, & Tamilpiriyan. (2019). Neethi Nool Kalanjiyam (1st Edition, p. 7). Kottravai Veliyeedu.
6. Bavanar, T. (2017). Pandai Tamilar Nakarikamum Panpaatum (2nd Edition, p. 134). Poompuhar Pathipagam.
7. Dobelli, R. (2014). The art of thinking clearly (p. 149). Sceptre.
8. Kartheges, P. (2017). Pemikiran kritis dan amalannya dalam masyarakat India berpendidikan Tamil di Malaysia berpandukan teks Tirukkural. UPSI Digital Repository. https://ir.upsi.edu.my/detailsg.php?det=3127
9. Henrik, F. (2020). The Art of Reading Minds (pp. 1–4, 58). Yellow Kite. (Original work published 2019)
10. Mohanarasu. (2018). Aathichudi Ilakiyangal (1st Edition). Manivasagar Pathipagam.
11. Narayanan, S. (2021). Tamiḻ Moḻik Kaṟṟal Kaṟpittalil Pēccut Tiṟaṉiṉ Celvākkum Āḷumaiyum [Influence And Personality Of Speaking Skills In Tamil Language Learning And Teaching. Muallim Journal of Social Science and Humanities, 5(2), 150–156. https://doi.org/10.33306/mjssh/128
12. Raguram. (2017). Tirukural Kuurum Todarpaadal: Oru Arinilai Aaivu. University of Jaffna Research Repository, 2(17), 79–87. http://repo.lib.jfn.ac.lk/ujrr/handle/123456789/8281
13. Seenivasan. (2022). Barathiyin Puthiya Aathichudi Oru Vilakuvurai (2nd Edition). Frontline Printers.


### பின்னிணைப்பு


**பேச்சு முறைமை**




**பின்னிணைப்பு 1: பேச்சு முறைமை குறித்துப் புதிய ஆத்திசூடியிலும் பாரதிதாசன் ஆத்திசூடியிலும் இடம்பெற்றுள்ள கருத்துகளின் ஒற்றுமையும் வேற்றுமைகளும்**





**பின்னிணைப்பு 2: பாரதிதாசன் ஆத்திசூடியில் பேச்சு முறைமைகள்**





**பின்னிணைப்பு 3: புதிய ஆத்திசூடியில் பேச்சு முறைமைகள்**

**கலை**





**பின்னிணைப்பு 4: கலை குறித்துப் புதிய ஆத்திசூடியிலும் பாரதிதாசன் ஆத்திசூடியிலும் இடம்பெற்றுள்ள கருத்துகளின் ஒற்றுமைகளும் வேற்றுமைகளும்.**

**ஒற்றுமையுணர்வு**




**பின்னிணைப்பு 5: ஒற்றுமையுணர்வு குறித்துப் புதிய ஆத்திசூடியிலும் பாரதிதாசன் ஆத்திசூடியிலும் இடம்பெற்றுள்ள கருத்துகளின் ஒற்றுமையும் வேற்றுமைகளும்.**

**சிந்தனை**




**பின்னிணைப்பு 6: சிந்தனை குறித்துப் புதிய ஆத்திசூடியிலும் பாரதிதாசன் ஆத்திசூடியிலும் இடம்பெற்றுள்ள கருத்துகளின் ஒற்றுமைகளும் வேற்றுமைகளும்.**